## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### கச்சத்தீவில் தமிழக மீனவர்களை இலங்கை இராணுவத்தினர் தொடர்ந்து தாக்கி வருவது மற்றும் இலங்கை இராணுவம் அங்கே முகாம் அமைப்பது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரே ஒரு issue எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்திருப்பதைத்தான் எடுத்துக்கொள்கிறேன். எல்லோரும் பேசலாம், உட்காருங்கள். கச்சத் தீவில் தமிழக மீனவர்களை இலங்கை இராணுவத்தினர் தொடர்ந்து தாக்கி வருவது மற்றும் இலங்கை இராணுவம் முகாம் அமைப்பது குறித்து அ.இ.அ.தி.மு.க. சார்பாக திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. பி.கே. சேகர்பாபு ஆகியோரும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பாக திரு. சி. ஞானசேகரன் அவர்களும், (குறுக்கீடுகள்) பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக திரு. அ. தமிழரசு, திரு. தி. வேல்முருகன், திரு. ஜி.கே. மணி, திரு. கி. ஆறுமுகம் ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி சார்பாக செல்வி கே. பாலபாரதி, திரு. என். நன்மாறன், திரு. கே. மகேந்திரன், திரு. சி. கோவிந்தசாமி, திரு. வே. மாரிமுத்து, திரு. ப. டில்லி பாபு, திரு. ஞா. ஜாண் ஜோசப், திருமதி ரா. லீமா றோஸ், திருமதி ஜி. லதா ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திரு. வை. சிவபுண்ணியம், திருமதி பி. பத்மாவதி, திரு. எஸ். இராசசேகரன், திரு. கே. உலகநாதன், திரு. சு. குணசேகரன், திரு. தி. இராமசாமி ஆகியோரும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாக திரு. து. ரவிக்குமார் அவர்களும் பேரவை விதி 55-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கின்றேன். இதுகுறித்து கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் யார் பேசப் போகிறீர்கள்? மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார். (குறுக்கீடுகள்)

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் திரு. வி.பி. கலைராஜன், திரு. சி.வி. சண்முகம் ஆகியோர் எழுந்து நின்றுகொண்டிருந்தனர்.)*

*முற்பகல் 10-35*

## 2. தகவல் கோரல்

**உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்**—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுசம்பந்தமாக உங்களுக்கு பதில் கொடுத்தாயிற்று. அதுபற்றி மீண்டும் எழுப்ப முடியாது, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* பேரவை விதி *224*-ஐ எடுத்துப் பாருங்கள். அந்த விதிப்படி, அது சம்பந்தமாக நீங்கள் பேசமுடியாது, உட்காருங்கள். திரு. டி. ஜெயக்குமார், பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* அதுபற்றி நீங்கள் raise பண்ணக் கூடாது என்று இருக்கிறது. திருப்பி it cannot be raised என்று விதியில் இருக்கிறது. நீங்கள் விதி *224*-ஐப் படித்துப் பாருங்கள். அந்த issue சம்பந்தமாக அவருக்குப் பதில் கொடுத்ததற்குப்பின் அதுபற்றி எதுவும் எழுப்ப முடியாது என்று இருக்கிறது. *(குறுக்கீடுகள்)* எதுவும் கேட்கக்கூடாது என்று இருக்கிறது. *(குறுக்கீடுகள்)* நீங்கள் விதி *224*-ஐப் படித்துப் பார்த்துவிட்டுச் சொல்லுங்கள். அந்தப் பிரச்சினை சம்பந்தமாக மறுப்புக் கொடுத்தாயிற்று. கொடுத்ததற்குப் பிறகு கேட்க முடியாது. *(குறுக்கீடுகள்)* அவருக்குக் கொடுத்தாகிவிட்டது. அவருக்கு notice given—கொடுத்தாயிற்று, எல்லோரும் உட்காருங்கள், திரு. ஜெயக்குமார், பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* Reply கொடுத்ததற்கான acknowledgement இதோ இருக்கிறது, பாருங்கள். *(குறுக்கீடுகள்)* சட்டமன்ற விதி இருக்கிறது. நீங்கள் சட்டமன்ற விதிப்படி பேசுங்கள். விதிப்படி நடந்துகொள்ளுங்கள். விதியை மீறி நடக்கவேண்டுமென்றால், அது நடக்காது, உட்காருங்கள். திரு. டி. ஜெயக்குமார் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)*

பேரவை விதி *224*-ஐ நான் வாசிக்கிறேன், கேளுங்கள்.

"பேரவைத் தலைவர் இசைவினை மறுத்தாலும் அல்லது அவையின் கவனத்தை ஈர்க்க வேண்டிய அவசியமில்லை என்று கருதினாலும் அறிவிப்புக் கொடுத்த உறுப்பினருக்கு அத்தகவலை அளிப்பின், அதன் பிறகு அப்பொருள் குறித்து எவ்வகையிலும் பேரவையில் எழுப்பக் கூடாது" என்று இருக்கிறது. *(குறுக்கீடுகள்)*

2009 ஜூன் 18] [பேரவைத் தலைவர்]

திரு. சி.வி. சண்முகம், ஓங்கிக் கத்தாதீர்கள். உட்காருங்கள். திரு. ஜெயக்குமார், பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜெயக்குமார், நீங்கள் பேசுகிறீர்களா, இல்லையா? நான் அடுத்த கட்சி உறுப்பினரைப் பேசச் சொல்லப் போகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவராகிய தாங்கள் பேரவை விதி 224-ஐப் படித்துக் காண்பித்ததற்குப் பிறகும், வேண்டுமென்றே இந்த அவையின் நடவடிக்கைகளைத் தடுக்கின்ற வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுவதை நீங்கள் அனுமதிக்கக் கூடாது. ஏனென்றால், இன்றையதினம் வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்மீது விவாதம் நடைபெறவேண்டும். சிறப்புக் கவன ஈர்ப்புப் பிரச்சினையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லவேண்டும். எனவே, காலத்தின் அருமை கருதி, தயவுசெய்து தாங்கள் கண்டிப்பாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. ஜெயக்குமார், பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. டி. ஜெயக்குமார், பேசுங்கள். நான் அடுத்த உறுப்பினரைப் பேசச் சொல்லப் போகிறேன். (குறுக்கீடு) அனுமதி மறுத்தாயிற்று, உட்காருங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** சார், அவர் சொல்வதை எடுங்களேன் சார்! அதில் என்ன சார் problem இருக்கிறது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஏ. செங்கோட்டையன், உங்கள் உறுப்பினர்களிடம் விதி 224-ஐப் பற்றிச் சொல்லிவிட்டேன். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடு) திரு. ஜெயக்குமார், பேசுகிறீர்களா, இல்லையா? பேசுங்கள். (குறுக்கீடுகள்) அனுமதி மறுத்தாயிற்று, முடியாது, உட்காருங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர். . .

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### கச்சத்தீவில் தமிழக மீனவர்களை இலங்கை இராணுவத்தினர் தொடர்ந்து தாக்கி வருவது மற்றும் இலங்கை இராணுவம் அங்கே முகாம் அமைப்பது—தொடர்ச்சி

**திரு. டி. ஜெயக்குமார்:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) திரு. கலைராஜன், நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம், உட்காருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் அடி என்றால், நம்முடைய தமிழ்நாட்டு மீனவர்களுக்கு இந்த ஆட்சியில் மூன்று பக்கமும் அடி விழுகின்ற நிலைதான் இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கின்றது. தமிழகத்தில், குறிப்பாக வடசென்னை, காசிமேடு பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லும்போது, ஆந்திராவைச் சேர்ந்தவர்களால் அன்றாடம் கடத்தப்படுவதும், அவர்களின் விசைப் படகுகள் கைப்பற்றப்படுவதும், மீன்கள் கொள்ளையடிக்கப்படுவதும், நம்முடைய மீனவர்களுக்கு பலத்த சேதத்தை உண்டாக்குவதும் வழக்கமாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்ற ஒன்று.

*முற்பகல் 10-40*

அதேபோன்று, கிழக்கு என்று எடுத்துக்கொண்டால், குறிப்பாக இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினத்தைச் சார்ந்த நம்முடைய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தினந்தோறும் அல்லல்படுகின்ற நிலைமை. அவர்களுடைய கண்ணீர், துன்பம் சொல்லி மாளாத அளவிற்கு இருப்பதைப் பத்திரிகையின் வாயிலாகவும், அங்கே நாங்களெல்லாம் நேரடியாகச் சென்று மீனவர்களைச் சந்திக்கும்போதும் அறிய முடிகின்றது. இது கிழக்கே நடைபெறுகின்ற அன்றாட நிகழ்ச்சி.

சரி, தெற்கே என்ன நடக்கிறது, மேற்கே என்ன நடக்கிறது என்று சொன்னால், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த மீனவர்கள், அதேபோன்று தூத்துக்குடி மாவட்டத்தைச் சார்ந்த மீனவர்கள், கேரளாவைச் சார்ந்தவர்களால் தாக்கப்படுகின்ற நிலைமை. எனவே, மீனவர்களுடைய வாழ்க்கை நிலை என்று சொன்னால், கடலிலே மீன் பிடிப்பதற்கு ஒரு பக்கம் போராட்டம் என்றாலும்கூட, தினந்தோறும் இந்தப் போராட்டங்களைச் சந்தித்து, வாழ்க்கையே ஒரு போராட்டம் என்கின்ற அளவிற்கு--டார்வின் சொன்னதுபோல, ஒரு போராட்ட வாழ்க்கையைத்தான் இன்றைக்கு இந்த ஆட்சியிலே மீனவர்கள் சந்தித்துக்கொண்டிருக்கிறார்கள்.

எனவே, சமீபத்திலேகூட 30 ஆம் தேதியன்று காசிமேட்டைச் சேர்ந்த மீனவர்கள் கடலிலே மீன் பிடிக்கச் சென்றவர்கள், 7 மீனவர்கள் இன்றைக்கும் கரை திரும்பவில்லை. அவர்கள் என்ன கதியில் இருக்கிறார்கள், கண்டுபிடிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பதைக்கூட இந்த அரசாங்கம் தெரிவிக்கவில்லை. எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அதேபோன்று, கிழக்கே மீன் பிடிக்கச் சென்றவர்கள், அவர்கள் தொடர்ந்து இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டு, கிட்டத்தட்ட விசைப் படகிலே மீன் பிடிக்கச் சென்றவர்கள், அதுவும் நம்முடைய எல்லைப் பகுதியிலே மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்களை, அங்கே வந்த இலங்கை கடற்படையைச் சேர்ந்த கப்பல் ஒரு படகிலே இடித்து, மீனவர்களைக் கடலிலே தள்ளி, நல்லவேளையாக அவர்கள் நீந்தி இன்னொரு படகிலே கரை சேர்ந்தார்கள். இன்னும் பல பேர் காணாமல் போன நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

ஜெகதாப்பட்டினத்திலேகூட, நேற்றைக்குக்கூட மீனவர்கள் அமைப்பைச் சேர்ந்தவர்களெல்லாம் அறிவிப்புச் செய்திருக்கிறார்கள். 'இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த அரசாங்கம் கண்டும், காணாமல் இருக்கின்றது. எனவே, இதுகுறித்து ஓர் உறுதியான நடவடிக்கை எடுக்காவிட்டால் தொடர்ந்து போராட்டம் செய்யப் போகிறோம், கடலுக்கு நாங்கள் மீன் பிடித் தொழில் செய்யப் போவதில்லை' என்று சொல்லி அறிவித்திருக்கின்றார்கள்.

இப்படி தினந்தோறும், இதுபோன்ற செயல் வாடிக்கையான ஒன்றாக ஆகிவிட்ட நிலையில், நாங்களும் சட்டமன்றத்திலே தொடர்ந்து இதற்காகக் குரல் கொடுத்து நம்முடைய மீனவர்கள் நல்வாழ்விற்காக வேண்டுமென்ற வகையிலே பல்வேறு யோசனைகள் சொன்னாலும்கூட, அந்த யோசனைகள் சொல்கின்ற நேரத்திலும், கருத்துகள் சொல்கின்ற நேரத்திலும், மீனவர்களுக்காகக் குரல் எழுப்புகின்ற நேரத்திலும், இந்த அரசாங்கம் அளந்து விடுவதற்கு ஓர் அளவே இல்லாமல், இதுபோன்ற நிகழ்வுகளை வருங்காலத்திலே நாங்கள் தடுப்போம் என்று சொல்லி, அதற்கு உறுதி சொல்கிறார்களேயொழிய, தடுப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை.

கச்சத்தீவைப் பொறுத்தவரையிலே முழுக்க, முழுக்க நம்முடைய தமிழ் நிலத்தினுடைய பகுதி. எனவே, அந்தத் தமிழ் நிலத்தினுடைய பகுதியாக இருக்கின்ற சூழ்நிலையில், 1974 ஆம் ஆண்டு உங்களுடைய ஆட்சிக் காலத்திலே தாரை வார்க்கப்பட்டது. அதை மீட்டுத் தருவதற்கு எந்த நடவடிக்கையும் இல்லை. எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே, கச்சத்தீவு நம்முடைய தமிழ் நிலத்தினுடைய ஒரு பகுதி என்று சொல்லி அதை மீட்பதற்குத் தீர்மானம் கொண்டு வந்தார்கள். அதன் அடிப்படையிலே, உச்ச நீதிமன்றத்திலேகூட வழக்குத் தொடுத்து-- அரசியலமைப்புச்

[திரு. டி. ஜெயக்குமார்] [2009 ஜூன் 18

சட்டத்திலே எந்தத் திருத்தமும் மேற்கொள்ளாமல், எந்தவிதமான முறைப்படியான சட்ட நடவடிக்கையும் இல்லாமல் கச்சத் தீவை அன்றைக்குத் தாராளமாக பச்சைக் கொடி காட்டித் தாரை வார்த்ததன் காரணமாக இன்றைக்கு இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

சிங்கள அரசாங்கம் இன்றைக்கு அந்தக் கச்சத்தீவிலே ஓர் உயர் கோபுரம் அமைத்து, அங்கே சிங்களப் படைகள் குவிக்கப்படும்போது நம்முடைய இராமேஸ்வரம் பகுதி மட்டுமல்லாமல், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டங்களைச் சார்ந்த மீனவர்கள் இனிமேல் அந்த எல்லையிலே தமிழ்நாடு எல்லையிலே, இந்திய எல்லையிலேகூட மீன் பிடிக்க முடியாத ஒரு சூழ்நிலை உருவாகப் போகின்றது. அதற்கு இந்த அரசாங்கம் என்ன உத்தரவாதம் தர இருக்கின்றது?

படகுகள் என்று பார்த்தால், ஆயிரக்கணக்கான படகுகள் தற்பொழுது இலங்கை அரசாங்கத்திடம் இருக்கின்றன. அவற்றை மீட்பதற்கான எந்த நடவடிக்கையும் இல்லை. அதேபோன்று 70, 80-க்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போயிருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பத்திற்கு இந்த அரசாங்கம் என்ன செய்திருக்கின்றது? கிட்டத்தட்ட நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் துப்பாக்கிச் சூட்டிலும், கடலில் மூழ்கியும் பலியானார்கள். அவர்களுக்கு இந்த அரசாங்கம் என்ன செய்திருக்கிறது என்று சொன்னால், ஒன்றும் செய்யவில்லை.

*முற்பகல் 10-45*

எனவே, மீனவர்களைப் பொறுத்தவரையில், இப்போது வளர்ந்து வருகின்ற அந்தத் தொழில்நுட்பத்திலே அவர்களுக்கு என்ன திசை காட்டும் கருவி கொடுக்கப்பட்டது? G.P.R.S.--அதனை இலவசமாகக் கொடுத்தார்களா என்று சொன்னால். subsidy cost-ல் இன்றைக்குக் கொடுக்கின்றார்கள். எத்தனை மீனவர்களுக்கு இன்றைக்குக் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் அதுகூட மத்திய அரசாங்கம் செய்கின்ற உதவியைக்கூட, அந்த G.P.R.S. கருவியை வாங்கிக் கொடுப்பதற்கு இந்த அரசாங்கத்திற்கு இயலாமல் இருக்கின்ற ஒரு நிலைமை. எனவே, நிலைமை இன்றைக்கு இப்படி வளர்ந்துவிட்ட ஒரு சூழ்நிலையிலே, அவர்களுக்கு அந்த நடுக்கடலிலே எந்த ஓர் ஆபத்து என்றாலும்கூட, ஒரு Satellite Phone-ஆவது, அதாவது செயற்கைக் கோள் தொலைபேசியாவது கொடுத்து அவர்களுக்கு உதவினால், நிச்சயமாக அவர்கள் எந்த நிலையில் இருந்தாலும்கூட நம்முடைய அரசாங்கத்தைத் தொடர்புகொண்டு அவர்களுக்கு

வேண்டிய பாதுகாப்பை அவர்கள் பெறுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படும். எனவே, இனியும் காலம் தாழ்த்தாமல் எந்த ஒரு மீனவருக்கும் பிரச்சினை இல்லாமல் இந்த அரசாங்கம் விழிப்போடு இருக்க வேண்டும் என்று கேட்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய இலட்சக்கணக்கான மீனவர்களுடைய வாழ்வாதாரம் மீன்பிடித் தொழில். இலங்கை கடற்படையினர் நம்முடைய மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்கிறபோது அவர்களைப் பிடித்துச் சிறையிலே அடைக்கிற காரணத்தினாலே பெரிய கொந்தளிப்பும், சில நேரங்களிலே இராமேஸ்வரம் மீனவர்கள் ஒரு வாரமாக மீன் பிடிக்கச் செல்லாமல் போராட்டம், இப்படிப் பல்வேறு நிகழ்வுகள் தமிழகத்திலே இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதற்குக் காரணம், இப்போது இருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்கள், அதேபோல, முன்னாள் பிரதமர் அருமை அன்னை இந்திரா காந்தி அவர்கள் காலத்தில் உருவாக்கிய உடன்படிக்கையினுடைய நிபந்தனைகளை மீறி இப்பொழுது இலங்கை அரசு கச்சத்தீவிலே டவர்களை அமைத்து, அவர்கள் இராணுவத் தளவாடங்களைக் குவிக்கின்ற காரணத்தினாலேதான் இந்தப் பிரச்சினை எழுகிறது என்கிற ஒரு கருத்து இன்று பலமாக எழுந்திருக்கிறது. நிபந்தனைகளை மீறி இப்பொழுது இலங்கை அரசு அங்கே டவர் அமைக்கக்கூடிய நிலைப்பாட்டினை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், நம்முடைய மத்திய அரசும் உடனடியாக இலங்கை அரசோடு பேசி, அதைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சியை எடுத்து, அந்தக் கச்சத் தீவு உடன்படிக்கையில் சொல்லப்பட்டிருக்கக்கூடிய நிபந்தனைகள், பொதுவாக நம்முடைய மீனவர்கள் எல்லாம் திருவிழாக் காலங்களிலே அங்கே சென்று திருவிழாக்களை நடத்துவதற்கான உரிமை, தாங்கள் மீன் பிடித்த அந்த மீன் வலைகளை உலர்த்துவதற்கான உரிமை என்று அப்பொழுதே பல உரிமைகளுக்கான நிபந்தனைகளைப் போட்டிருக்கிறீர்கள். அந்த நிபந்தனைகள், இப்பொழுது வேறு என்னென்ன நிபந்தனைகள்மூலமாக தமிழகத்தில் இருக்கக்கூடிய, குறிப்பாக, தொண்டி, நம்புதாளை, இராமேஸ்வரம், மண்டபம், தங்கச்சிமடம், தனுஷ்கோடி, வேதாரண்யம், கோடியக்கரை போன்ற பகுதிகளிலேயிருந்து அங்கே கச்சத்தீவு பகுதிகளுக்குச் சென்று மீன்

பிடிக்கக்கூடிய மீனவர்களுக்கு என்னென்ன உரிமைகள் அப்பொழுது நிலைநாட்டப்பட்டன, அந்த உரிமைகள் இப்பொழுது பாதுகாக்கப்படுகின்றனவா என்பதைப் பற்றியெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, நம்முடைய தமிழக மீனவர்கள் எல்லையைத் தாண்டி அவர்கள் இலங்கைப் பகுதிக்குச் சென்றுவிடுகிற காரணத்தினாலே அவர்கள் பிடிக்கப்படுகிறார்கள்; அவர்கள் அங்கே சிறையிலே அடைக்கப்படுகிறார்கள்; அல்லது அங்கே அவர்கள் தாக்கப்பட்டு, சில பேர் கொன்றுவிடக்கூடப்படுகிறார்கள் என்றெல்லாம் செய்திகள் வருகின்றன. இப்படிப்பட்ட நிலைகளைத் தவிர்க்க வேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஏற்கெனவே தமிழக அரசு மிளிரும் அந்த மிதவை விளக்குகளை அந்த எல்லையிலே நாங்கள் அமைக்கிறோம் என்றுகூட இந்த அவையிலே தெரிவித்தார்கள்.

இதற்கு முன்னாலே, பொதுவாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள் சொல்கிறபோது, இப்பொழுதுதான் இதுபோன்ற நிகழ்வுகள் நடப்பதாகச் சொன்னார்கள். உடன்படிக்கை ஏற்பட்ட காலத்திலிருந்தே இப்படிப்பட்ட பிரச்சினைகள் வந்துகொண்டே இருக்கின்றன. அதற்கு இலங்கை அரசு சொல்லக்கூடிய காரணம், எல்லையை நம்முடைய தமிழக மீனவர்கள் தாண்டிச் சென்றுவிட்டார்கள் என்று சொல்லக்கூடிய கருத்துதான் அவர்கள் சொல்லி, நம்முடைய மீனவர்களை அவர்கள் பிடித்துவிடுகிறார்கள், சிறையில் அடைக்கிறார்கள். ஆகவே ஒளிரும் அந்த மிதவை விளக்குகளை அமைத்து, எல்லை இதுதான் என்று வரையறுத்து, எப்பொழுதும் காட்டுவதற்கான முயற்சியை நம்முடைய தமிழக அரசு மேற்கொள்ளுமா? அதேபோல, Coast Guard Ship ஒன்றை நாம் அந்த இடத்திலே permanent-ஆக நிறுத்திவிட்டோம் என்று சொன்னால், நம்முடைய மீனவர்கள் அந்த Ship-ஐப் பார்த்து, அந்த எல்லையைத் தாண்டாமல் இருப்பதற்கும் சரி, ஒருவேளை எல்லையைத் தாண்டாமல் இருக்கிறபோதே இலங்கை இராணுவத்தினர் நம்முடைய ஆட்களைப் பிடித்துக் கொண்டு போனாலும்கூட நம்முடைய Coast Guard-ஐச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகள் தடுத்து நிறுத்திப் பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களை மீட்கக்கூடிய பணிகளைக்கூட நாம் அந்த இடத்திலே

2009 ஜூன் 18] [திரு. சி. ஞானசேகரன்]

மேற்கொள்ளலாம். ஆகவே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய அரசோடு பேசி, Coast Guard Ship ஒன்றை அந்த இடத்தில் நிலையாக, permanent-ஆக நிறுத்தி, தமிழக மீனவர்களுடைய உரிமையைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதிலே மத்திய அரசும், மாநில அரசும் நிச்சயமாக, இப்பொழுது தங்களுடைய அந்த நிபந்தனைகளையெல்லாம் மீறி, கச்சத்தீவு உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகளையெல்லாம் மீறி இன்று செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய இலங்கை அரசை, அவர்களுடைய பணிகளைத் தடுத்து நிறுத்தி, நம்முடைய தமிழக மீனவர்களுடைய உரிமையைக் காப்பாற்றுவதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக போர்க்கால அடிப்படையிலே நடவடிக்கை எடுப்பார்களா என்று கேட்டு, அமைகிறேன்.

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைச் சார்ந்த இராமேஸ்வரம் மற்றும் தென் மாவட்டங்களைச் சார்ந்த மீனவர்கள், தொடர்ந்து இலங்கை கடற்படையாலே கடத்திச் செல்லப்படுவதும், அவர்களைத் துப்பாக்கியால் படுகொலை செய்வதும், மீன்களை எடுத்துச் செல்வதும், வலைகளை அறுத்துவிடுவதுமான தொடர் சோதனைகளை நமக்கு உண்டாக்கி வருகிறார்கள். இப்படிப் பார்த்தால் இதுவரையிலே தமிழக மீனவர்கள் 430 பேர் கடத்தி, படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். மீனவர்கள் ஒவ்வொருவரும் கடத்திச் செல்கிற நேரத்தில், தமிழக அரசின் சார்பில் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதுவதும், கோரிக்கை வைப்பதும், பிறகு மாதக் கணக்கில் அங்கே அடைத்து வைத்துக் கொடுமைப்படுத்தப்பட்டு, அவர்களை விடுதலை செய்வதும் வாடிக்கையாக இருந்து வரக்கூடிய ஒரு நிகழ்வு. நம்முடைய தமிழக மீனவர்களைத் தவிர வேறு எங்கும் மீனவர்களுக்கு இப்படிப்பட்ட கொடுமை நடந்ததில்லை என்பதை நாம் பல்வேறு சான்றுகளோடு சொல்ல முடியும். இது தமிழகத்திற்குச் செய்யப்படுகிற கொடுமை என்கிற காரணத்தினாலே அலட்சியப்படுத்தப்படுகிறதா

[திரு. ஜி.கே. மணி] [2009 ஜூன் 18

என்ற கேள்விகூட நமக்கு எழுகிறது. உதாரணத்திற்குச் சொல்வோம் என்று சொன்னால், மும்பையிலே, பீகாரைச் சார்ந்த ஒருவர் கொடுமைப்படுத்தப்பட்ட நேரத்தில் பீகார் மாநிலமே எழுந்து கொதித்தது. நடுவண் அரசு உடனடியாகத் தலையிட்டது. பஞ்சாப் மாநிலத்தைச் சார்ந்த சீக்கிய மதத்தைச் சார்ந்த ஒருவர் படுகொலை செய்யப்பட்டார் என்றவுடனே, பஞ்சாப் மாநிலம் பதறிப்போய்விட்டது. என்ன நடந்தது என்பதையெல்லாம் நாம் அறிவோம். ஆனால் இப்படித் தொடர்ந்து தமிழக மீனவர்கள் கடத்தப்படுகிறார்கள், கொலை செய்யப்படுகிறார்கள் என்று அறிந்தும், இன்னும் கடிதம் எழுதிக்கொண்டே இருந்தால் இலங்கை அரசு தொடர்ந்து இந்த நடவடிக்கையில் ஈடுபடுவது வாடிக்கையாகிக்கொண்டிருக்கிறது.

இப்பொழுது இலங்கை, மீனவர்களைக் கடத்திச் செல்கிற நிலை எல்லாம் மாறி, இன்னும் மேலே ஒரு படி சொன்னால், கடந்த 8 ஆம் தேதியில் இருந்து இன்று வரையிலே 3 முறை இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது. இதற்கு மேல் இப்பொழுது சொல்லப்படுவது, நம்முடைய கச்சத்தீவுப் பகுதியில் இலங்கையினுடைய கடற்படைத் தளம் அமைக்கப்படுகிறது என்ற ஒரு செய்தி வந்ததாக முதலில் செய்தி கசிந்தது. ஆனால், கடத்திச் செல்லப்பட்ட மீனவர்கள் திரும்பி வந்தார்கள். அவர்களை விசாரித்த நேரத்தில், அரசு அலுவலர்களிடத்திலே சொன்னது, கச்சத்தீவிலே கட்டுமானப் பணிகள் நடைபெறுகின்றன, அந்தக் கட்டுமானப் பணிக்கு எங்களைப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்று வாக்குமூலத்திலே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, கடற்படைத் தளம் அமைக்கிறார்கள்; ஏதோ பணி நடைபெறுகிறது என்பது யதார்த்த நிலை என்பதை நாம் அறிவோம். இப்படி இலங்கை நமக்குத் தொடர்ந்து அநீதி இழைத்துக்கொண்டிருக்கிறது. ஆனால், இலங்கைக்கு நாம் பரிவு காட்டிக்கொண்டிருக்கிறோம். பல்வேறு உதவிகளைச் செய்துகொண்டிருக்கிறோம். இந்தச் சூழ்நிலையில், இலங்கையை சீனாவும், பாகிஸ்தானும் ஒரு தளமாக அமைத்துக்கொள்ளவும் முற்பட்டு வருகின்றன. இது தமிழ்நாட்டுக்கு, இந்தியாவிற்கு மிகப் பெரிய பேராபத்தை உண்டாக்கும் என்பதை, இது முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டிய காலம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆன காரணத்தாலேதான், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழினமே அழிக்கப்பட்டு நாம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த நிலை மாறி அது இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்பட்ட அவல நிலையைவிட இந்திய நாட்டுத் தமிழர்களுக்கும்,

2009 ஜூன் 18] [திரு. ஜி.கே. மணி]

தமிழ்நாட்டு தமிழர்களுக்கும் ஆபத்து ஏற்படும் நிலை உருவாகி இருக்கிறது என்பதைத் தமிழக அரசு மறந்துவிடக்கூடாது.

அப்படி கடற்படைத் தளம் அமைக்குமானால் அந்தக் கடற்படைத் தளம் சீனாவுக்கும், பாகிஸ்தானுக்கும் அது பாதுகாப்பு அளிப்பதற்கு, அவர்களுக்கு ஏதுவாகவும் அமைந்துவிடும் என்பதை நம்முடைய அரசு மறந்துவிடக்கூடாது. ஆகவே, இது உன்னிப்பாக இருக்க வேண்டிய காலக்கட்டம்.

எனக்கு முன்னாலே பேசிய நம்முடைய உறுப்பினர்கூட குறிப்பிட்டுச் சொன்னார்கள். இது மீனவர்கள் பிரச்சினை. இது முழுக்க, முழுக்க மீனவர்கள் பிரச்சினை. இருந்தாலும்கூட, நாட்டின் பேராபத்துப் பிரச்சினை என்பதையும், அந்தக் கோணத்திலயேும் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மீனவர்களுக்கு நிரந்தரப் பாதுகாப்பு வேண்டும். இனி தமிழ்நாட்டு தமிழர்கள் ஒரு மீனவன் கடத்தப்பட்டாலும், படுகொலை செய்யப்பட்டாலும் இலங்கையோடு கடும் எச்சரிக்கை சொல்லக்கூடிய அளவுக்கு நாம் நடந்துகொள்ளவேண்டும். இதுவரை எச்சரிக்கைகூட இல்லை, கடிதம் எழுதுகிறோம். இந்திய அரசுக்கு வேண்டுகோளை வைப்பதைத் தவிர என்ன எச்சரிக்கை விடுத்தது? ஆன காரணத்தினாலேதான், இந்தப் பிரச்சினையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், தமிழக அரசு மிகுந்த விழிப்போடு இருக்க வேண்டும். எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு இந்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வலியுறுத்தி, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன்.

*முற்பகல் 10-55*

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கை அன்னையோடு நித்தம் நித்தம் போராடி வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கக்கூடிய தமிழக மீனவர்கள் இன்றைக்கு இயற்கையின் சீற்றங்களால் பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல், இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து தாக்கப்படக்கூடிய சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக, இராமநாதபுரம், புதுக்கோட்டை, நாகப்பட்டினம் மாவட்ட மீனவர்கள் கச்சத்தீவுப் பகுதியிலே மீன் பிடிக்கச் செல்லும்போதெல்லாம் இலங்கை

கடற்படையினரால் கைது செய்யப்படுவது, தாக்கப்படுவது துப்பாக்கிச்சூடு நடத்தப்படுவது, மீனவர்கள் பல நாட்கள் தங்கிப் பிடித்த மீன்களை அபகரிப்பது போன்ற செயல்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனக்கு முன்பு பேசிய உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதுபோல தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுகிறார்கள் என்றால், அதற்குக் காரணம் இந்திய நாட்டினுடைய கடல் எல்லையைத் தமிழக மீனவர்கள் தாண்டுகிறார்கள் என்று இலங்கை அரசால் சொல்லப்படுகிறது. இந்த அவையில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பாக இந்திய கடல் எல்லைப் பகுதியில் ஒளிரும் மிதவை விளக்குகள் அமைக்கப்படும், அதற்கான நடவடிக்கைகள் எல்லாம் மேற்கொள்ளப்படும் என்று அறிவிப்புகள் எல்லாம் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்த அறிவிப்புகள் வெளியிடப்பட்டு சில ஆண்டுகள் ஆனாலுங்கூட இன்று வரை அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. அதனுடைய விளைவாக இன்றைக்கு கச்சத் தீவுப் பகுதியிலே நம்முடைய தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்றால், இந்தக் தாக்குதலைத் தடுத்து நிறுத்துவதற்கு மத்திய அரசின்மூலம் இந்த மாநில அரசு எப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

இன்றைக்கு கச்சத்தீவில் இலங்கை கடற்படையினர் தங்களது தளங்களை அமைப்பதாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. உயர் கோபுரங்கள் எல்லாம் அமைத்துக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இராமேஸ்வரம் பகுதியில் இருந்து மீன் பிடிக்கச் செல்லக்கூடிய மீனவர்கள் விசைப் படகுகளில் 10 மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றால், அந்தப் படகில் இருக்கக்கூடிய ஒரு மீனவர் இலங்கை கடற்படையினரால் இறக்கப்பட்டு கச்சத்தீவுப் பகுதியிலே வேலை செய்வதற்கு நிர்பந்திக்கப்படுகிறார் என்று இராமேஸ்வரம் பகுதியிலே இருக்கக்கூடிய மீனவர்கள் சொல்கிறார்கள். ஏற்கெனவே இலங்கை-இந்திய உடன்பாட்டின்படி கச்சத்தீவில் தமிழக மீனவர்களுக்கான உரிமைகள் பல வரையறுக்கப்பட்டிருக்கின்றன. அந்த உரிமைகள் கடந்த பல ஆண்டு காலமாக நம்முடைய மீனவர்களால் பயன்படுத்தப்பட முடிந்திருக்கின்றனவா என்றால் பயன்படுத்தப்பட முடியவில்லை. குறிப்பாக, கச்சத்தீவிலே இருக்கக்கூடிய மாதா கோயில் திருவிழாவில் சாமி கும்பிடுவதற்கான அனுமதி என்பது, உரிமை என்பது தமிழக மீனவர்களுக்கு உண்டு.

2009 ஜூன் 18] [திரு. கே. மகேந்திரன்]

அந்தப் பகுதியிலே மீன் பிடிக்கச் செல்லக்கூடிய மீனவர்களுக்குத் தங்களது வலைகளைக் காய வைப்பதற்கான உரிமைகள் என்பதெல்லாம் வழங்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கடந்த பல ஆண்டுகளினுடைய நிகழ்வுகளைப் பார்த்தால், அந்த உரிமைகள் நம்முடைய தமிழக மீனவர்களுக்கு மறுக்கப்பட்டிருக்கின்றன. இந்த உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு மத்திய அரசில் மிக பலத்தோடு இருக்கக்கூடிய நம்முடைய மாநில அரசு, மத்திய அரசை நிர்ப்பந்தப்படுத்தி தமிழக மீனவர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, நிரந்தரமாக கச்சத்தீவுப் பகுதியிலே மீன் பிடிக்கவும் மீனவர்களது உயிர்களையும், உடைமைகளையும், பொருட்களையும் பாதுகாப்பதற்கு இந்திய கடற்படையினுடைய ரோந்துக் கப்பல்கள் நிரந்தரமாக அந்தப் பகுதியிலே ரோந்துப் பணியில் ஈடுபட்டு, நம்முடைய மீனவர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையையும், அதேபோன்று இந்திய-இலங்கை உடன்பாட்டில் நம்முடைய மீனவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை. 1974 ஆம் ஆண்டு ஏற்பட்ட கச்சத்தீவு ஒப்பந்தத்தின்படி, தமிழ்நாட்டிற்கு, இந்திய நாட்டிற்கு நிரந்தரத் தீர்வு என்னவென்று சொன்னால் கச்சத்தீவை மீட்பதுதான் நிரந்தரத் தீர்வாக அமையும். ஆகவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்திய அரசுக்குக் கோரிக்கை வைத்து, கச்சத்தீவை மீட்கிற நடவடிக்கையிலும் ஈடுபட வேண்டுமென்கிற கோரிக்கையை முன் வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

*முற்பகல் 11-00*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கச்சத் தீவு குறித்த இந்தக் கவன ஈர்ப்பில்--அன்னை இந்திரா காந்தியார் அவர்களால் வழங்கப்பட்ட கச்சத்தீவு குறித்த

[திரு. வை. சிவபுண்ணியம்] [2009 ஜூன் 18

இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே என்னுடைய கருத்தைப் பதிவு செய்ய விரும்புகிறேன். இதிலே குறிப்பாக இப்பொழுது வந்திருக்கிற புதிய செய்தி, இலங்கை அரசால் அங்கே கண்காணிப்பு கோபுரம் அமைக்கப்படுகிறது; கடற்படைத் தளம் அமைக்கப்படுகிறது என்ற செய்தி அனைத்துப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது, படமும் வந்திருக்கிறது. அப்படியானால், இலங்கையில் போர் முடிவுக்கு வந்துவிட்ட நிலையில் இலங்கை அரசு மேலும் தன்னுடைய எல்லைகளை விரிவுபடுத்துவதனுடைய நோக்கமாக கச்சத்தீவையும் அபகரிப்பதற்கான முயற்சியாக அந்த நடவடிக்கை தொடருவது மிக அபாயகரமான போக்காகும். இதன் விளைவாக நம்முடைய தமிழகத்திற்கு மிகப் பெரிய ஆபத்து நெருங்குகிறது. தமிழர்களுக்கு மிகப் பெரிய ஆபத்தை விளைவிக்கிற செயலாக இது அமையுமென்ற காரணத்தினால்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு ஒரு கடிதத்தின்மூலமாகத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். ஆனால், மத்திய அரசு அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதுதான் கேள்வி. அதிலே குறிப்பாக நம்முடைய உரிமைகள் மறுக்கப்படுவதும், மீனவர்களுடைய நலன்கள் பாதுகாக்கப்பட முடியாமல் போய்விடுகிற கொடுமை தொடருவதும் தடுக்கப்பட வேண்டுமென்பதுதான் அந்தக் கடிதத்தினுடைய நோக்கமாக இருக்கிறது.

ஆனால், கச்சத்தீவைப் பொறுத்தவரையிலும் இந்தியாவிற்கு உரிமையாக இருந்த நிலை மாறி, ஒப்பந்தம் போடப்பட்டதற்குப் பின்னாலே நம்முடைய தமிழக மீனவர்கள் அங்கே செல்லலாம், ஓய்வெடுக்கலாம், வலைகளை உலர வைக்கலாம், அந்தோணியார் கோயில் திருவிழாவிலே பங்கேற்கலாம் என்ற நிலைகள் இருந்தன. தமிழகத்தின் சார்பில் பாதிரியார்கள், இலங்கையின் சார்பிலே பாதிரிமார்களெல்லாம் அங்கே வருகை தந்து அந்த அந்தோணியார் கோயில் விழாவிலே இரண்டு நாட்டு மக்களுமே அங்கே கலந்துகொண்ட வரலாறு இருக்கிறது என்பது செய்தி. அதிலும் மிக முக்கியமானது, இலங்கைத் தமிழர்கள், தமிழகத் தமிழர்கள் இருவருமே பாஸ்போர்ட் இல்லாமல், விசா இல்லாமல் கலந்துகொள்கிற விழா என்பது கச்சத்தீவிலே நடைபெற்றிருக்கிறது. இப்படி அன்னியோன்னியமாக இருந்த அந்தத் தீவு இப்போது நமக்கெதிராக ஓர் இராணுவத் தளமாக மாறும் என்ற சூழல் வருமானால் அது மிகப் பெரிய ஆபத்து. இப்படித்தான் ஒரு குறிப்பிட்ட காலத்திலே அமெரிக்காவிலே அந்த இராணுவத் தளம் டீகோ கார்ஷியா தீவிலே அமைப்பதற்கான முயற்சி எடுக்கப்பட்டபோது இந்திய நாட்டிலே

2009 ஜூன் 18] [திரு. வை. சிவபுண்ணியம்]

மிகப் பெரிய எதிர்ப்பு வந்தது, தமிழகத்திலே வந்தது. நம்முடைய எதிர்ப்பின் காரணமாக, சோவியத்தினுடைய எதிர்ப்பின் காரணமாக அது தடைப்பட்டது. ஆனால், இலங்கையில் இப்போது ஏற்பட்டிருக்கிற இந்தப் பிரச்சினை, இந்தப் போரின் காரணமாக இப்போது புதிய உத்வேகம் ஏற்பட்டிருப்பதாக நாங்கள் கருதுகிறோம். ஆகவே, இதன்மூலமாக இந்திய நாட்டிற்கு ஆபத்து, குறிப்பாக தமிழகத்திற்கு ஆபத்து வருகிறது. இதைத் தடுக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் நம்முடைய மத்திய அரசாங்கத்திற்கு இருக்கிறது. குறிப்பாக, தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுகிறார்கள், துப்பாக்கிச் சூட்டிற்கு ஆளாகிறார்கள், உயிர்ப் பலிக்கு ஆளாக்கப்பட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். இதைத் தடுக்க வேண்டிய இந்திய கடற்படை என்ன செய்கிறது என்பதுதான் கேள்வி. இதைக் கேட்கிறபோது சில வருத்தங்களெல்லாம்கூட இந்த அவையிலே வந்ததுண்டு. இப்போதும்கூட அதே காரியம் நடைபெற்றுக்கொண்டேயிருக்கிறது.

இன்றைக்கு ஒரு செய்தி காலையில் வந்திருக்கிறது. இராமேஸ்வரம், ஜெகன்னாதப்பட்டினத்திற்கு அருகிலே இரண்டிரண்டு பேர்களாக கால்கள், கைகள் இணைக்கப்பட்ட நிலையிலே பிணங்கள் மிதந்துகொண்டிருப்பதாக ஒரு செய்தி. இது ஓர் அதிர்ச்சியான செய்தியாக இப்போது வருகிறது. அங்கே இருக்கக்கூடிய மீனவர் சங்கத்தினுடைய தலைவர் இந்தத் தகவலை இங்கே அனுப்பியிருக்கிறார். அனேகமாக 4 இணைக்கப்பட்ட பிணங்கள் மிதக்கின்றன என்றால், 8 பிணங்கள் மிதந்துகொண்டிருக்கின்றன. யார் என்று தெரியவில்லை என்ற செய்தியை எங்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள். காவல் துறையிலே புகார் செய்யப்பட்டிருக்கிறது. காவல் துறை போய் அதைக் கைப்பற்றுவதற்குரிய முயற்சி எடுத்ததா, என்ன என்பது எனக்குத் தெரியவில்லை. இது இன்றைக்கு நடைபெற்றிருக்கிற செய்தி. ஆகவே, அது யார், அது மீனவர்களா அல்லது பொது மக்களா அல்லது இலங்கைத் தமிழர்களா, என்ன என்பது, அந்தப் பிணத்தைக் கைப்பற்றியதற்குப் பின்னாலேதான் தெரியவிருக்கிறது. ஆகவே, இப்படியொரு மோசமான போக்கு நம்முடைய தமிழகக் கடற்கரையிலே நடைபெற்றுக்கொண்டிருப்பது என்பது எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

அதைப்போல, நம்முடைய கடல் பகுதிகளில் இலங்கையில் நடைபெறுகிற போரின் காரணத்தினால் அப்பாவிப் பொது மக்கள்

[திரு. வை. சிவபுண்ணியம்] [2009 ஜூன் 18

எப்படியாவது உயிர் பிழைக்க வேண்டுமென்பதற்காகத் தப்பித்துக் கடல் வழியாக நமது தமிழகத்திற்கு வருவதற்குரிய முயற்சி எடுக்கிறபோது, அப்படிக் கடலிலே தத்தளிக்கிற அந்தத் தமிழர்களைப் பாதுகாக்கிற அல்லது அவர்களைக் கொண்டு வந்து சேர்க்கிற காரியத்தைத் தமிழக மீனவர்கள் செய்தார்கள் என்ற காரணத்தினாலே, அவர்கள் பாதிக்கப்பட்டார்கள். அவர்கள் இலங்கை கடற்படையால் பாதிக்கப்பட்டது என்பது மட்டுமல்ல, நம்முடைய தமிழகக் காவல் துறையே அவர்கள்மீது வழக்குகள் பதிவு செய்கிறது. இதையெல்லாம் தடுக்க வேண்டிய பொறுப்பு யாருக்கு இருக்கிறது என்றால், மத்திய அரசினுடைய காவல் படைக்கு இருக்கிறது. இலங்கை கடற்படைக்குத்தான் இருக்கிறது. நடுநிலையாக இருந்து, ஒரு கண்காணிப்போடிருந்து இதைத் தடுத்து, மீனவர்களையும் பாதுகாத்து, மக்களையும் பாதுகாப்பதற்குரிய முயற்சியை மத்திய அரசு எடுத்திருக்குமானால், இப்படித் தமிழக மீனவர்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டிருக்கமாட்டார்கள் என்பதைத்தான் இதிலேயிருக்கிற செய்தியாக நான் கூற விரும்புகிறேன்.

ஆகவே, இந்த நிலையிலே இந்தக் கச்சத்தீவு என்பது மிகப் பெரிய பிரச்சினையாக நமது தமிழகத்திற்கு மாறப் போகிறது. இப்படி மாறப் போகிற அந்த விளைவுகளைத் தடுக்க வேண்டிய மத்திய அரசு, ஏனோ தானோ என்ற போக்கிலே இருந்தால், அதனால் தமிழகம் மிகப் பெரிய பாதிப்புக்கு ஆளாகக்கூடிய நிலை உருவாகும் என்பதைத்தான் என்னுடைய கருத்தாக நான் சொல்ல விரும்புகிறேன்.

*முற்பகல் 11-05*

அங்கே போர் முடிந்து மூன்று இலட்சம் தமிழர்கள் உணவு, உடை, இருக்க இடமின்றி, கழிப்பிட வசதியின்றி, எதுவும் இல்லாமல் தவிக்கிறார்கள். அந்த உதவியையும் செய்யவேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆனால் நாடாளுமன்றத்திலும், வெளியிலும் அந்த ராஜபக்சேயும், அவரது அமைச்சர்களும், இந்தியாவிற்கு நன்றி என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்த இந்தியாவிற்கு நன்றி சொல்கின்றபோது இலங்கையிலே இருக்கின்ற அந்தச் சூழ்நிலை வருகின்றபோது, தமிழக மீனவர்களுக்கு பாதிப்பு ஏற்படுகின்றபோது, என்ன நிலை என்பது என்னுடைய கேள்வியாக இருக்கிறது. (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். இது அதிகாரப்பூர்வமாக அவர்கள் மந்திரிகளும் சொன்னது, இராணுவ அமைச்சர் சொன்னது, ராஜபக்சேயினுடைய தம்பி சொன்னது... (குறுக்கீடு)

2009 ஜூன் 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினை கச்சத்தீவினைப் பற்றியது. இலங்கையைப் பற்றியது அல்ல. இலங்கையைப் பற்றி வேண்டுமானால் தனியாக ஒரு விவாதம் வைத்துக்கொள்ளலாம். நாளைக்கே வைத்துக்கொள்ளலாம். அதைப்பற்றி நாம் மறுப்பதற்கில்லை. கச்சத் தீவினைப் பற்றிய பிரச்சினையை மட்டும்தான் இங்கே பேசவேண்டுமே தவிர, இலங்கையிலே இருக்கின்ற பிரச்சினையைப் பற்றிப் பேசினால், அதை நாங்களும் பேச வேண்டிய நிலை வரும். அதனால் வீணான பிரச்சினைகள் வரும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கச்சத்தீவுப் பிரச்சினை என்பது இலங்கைப் பிரச்சினையோடு ஒட்டிய பிரச்சினையாக இருப்பதனால் சொல்லவேண்டியிருக்கிறது. ஆகவே, இலங்கைப் பிரச்சினையையொட்டி கச்சத்தீவுப் பிரச்சினை உருவெடுக்கிறது. இலங்கை அரசு அங்கே போரிலே வெற்றி பெற்றதாகக் கருதி கச்சத் தீவைக் கைப்பற்றி அது தமிழகத்தினுடைய மக்களைப் பாதிக்கின்ற பிரச்சினையாக வருகின்றபோது—இந்தியாவிலே தமிழகம் இருக்கிறது என்கின்ற காரணத்தினாலே இந்திய அரசு பாதுகாக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. ஆகவே, மத்திய அரசாங்கம் கச்சத்தீவை ... *(குறுக்கீடு)*

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கச்சத்தீவை அவர்கள் கைப்பற்றவில்லை. இந்திய அரசாங்கமே கொடுத்தது. ஆனால் கச்சத்தீவைக் கைப்பற்றியதாக தவறான தகவலை இங்கே பதிவு செய்கிறார். அதனாலே, கச்சத்தீவைப் பற்றி மட்டும் இங்கே பேசவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** கச்சத்தீவை மத்திய அரசாங்கம் மீண்டும் நம்முடைய இந்திய நாட்டிற்குப் பெறவேண்டும் என்பதைத்தான் இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய கோரிக்கையாக நான் முன் வைக்க விரும்புகிறேன். ஆகவே, கச்சத்தீவை மீட்டெடுப்பதற்கான முயற்சியை நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுக்கவேண்டும். அதுதான் தமிழகத்தைப் பாதுகாக்கும். தமிழர்களுடைய உணர்வைப் பாதுகாக்கும். அதற்குரிய முயற்சியை எடுப்பதன்மூலமாக தமிழக மீனவர்கள் பாதுகாக்கப்படுவார்கள்.

இதற்கான வகையிலே மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தவேண்டும். தேவையானால் அடுத்த கட்டப் போராட்டத்தையும் அனைத்துக் கட்சிகளும் செய்யவேண்டும் என்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** கச்சத்தீவினைப் பெறவேண்டும் என்பது இவரது கருத்தா அல்லது கம்யூனிஸ்டு கட்சியின் கருத்தா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. ரவிக்குமார், பேசுங்கள்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்டுமே சட்டமன்றக் கூட்டத் தொடர்களிலே விவாதிக்கப்படுகிற விஷயமாக இந்தக் கச்சத்தீவுப் பிரச்சினை தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. இந்தக் கச்சத்தீவு ஒப்பந்தம் போடப்பட்டபோது அன்றைக்குத் தமிழகத்திலே ஆட்சியிலே இருந்த... (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவ்வளவு நேரம் என்ன செய்துகொண்டிருந்தீர்கள்?

**திரு. வை. சிவபுண்ணியம்:** என்னுடைய கருத்தா, கட்சியினுடைய கருத்தா என்று கேட்டால், கட்சியினுடைய கருத்தாகத்தான் நான் சொல்லுகிறேன். கச்சத்தீவை மீளப் பெறவேண்டும் என்பது எங்களது கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, திரு. ரவிக்குமார் பேசுங்கள்.

**திரு. து. ரவிக்குமார்:** இந்திய இறையாண்மைக்கு உட்பட்ட பகுதி எதுவொன்றையும் இன்னொரு நாட்டுக்குக் கொடுக்க வேண்டும் என்று சொன்னால், அதை இந்திய பாராளுமன்றத்திலே விவாதித்துதான் முடிவெடுக்க வேண்டும் என்று அரசியல் அமைப்புச் சட்டத்திலே இருக்கின்ற விதியையும் மீறி அன்றைக்குக் கச்சத்தீவு இலங்கைக்கு தாரை வார்த்துக் கொடுக்கப்பட்டபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தினைச் சார்ந்த உறுப்பினர்களும், தமிழகத்தினுடைய மற்ற

2009 ஜூன் 18] [திரு. து. ரவிக்குமார்]

பாராளுமன்ற உறுப்பினர்கள், குறிப்பாக முஸ்லீம் லீக் கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடாளுமன்றத்திலிருந்து வெளிநடப்புச் செய்த காலத்திலிருந்து தொடர்ந்து கச்சத்தீவுப் பிரச்சினை என்பது இங்கே மிக முக்கியமான பிரச்சினையாக, தமிழ் மக்களுடைய ஒரு ஜீவாதாரப் பிரச்சினையாகப் பேசப்பட்டு வருகிறது. இந்த 25 ஆண்டுகளிலே, 300-க்கும் மேற்பட்ட மீனவர்கள் அங்கே இலங்கை கடற்படையால் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். பல நூறு கோடி ரூபாய் சொத்துக்கள் இந்திய மீனவர்களுக்கு உரிமையான சொத்துக்கள் இலங்கை கடற்படையினரால் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன, சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன. இவையெல்லாவற்றையும் மீறி, இன்றைக்கு அந்தப் போர் உக்கிரம் அடைந்த நிலையிலே, அந்தக் கச்சத்தீவு பகுதியைச் சுற்றிலும், கடற்கண்ணிவெடிகளை இலங்கை கடற்படையினர் போட்டு வைத்ததாக இந்திய கடற்படை அதிகாரிகளே சொன்னார்கள். அந்த அளவுக்கு இந்திய மீனவர்களுடைய உரிமைகள் பாதிக்கப்பட்டன. அந்த ஒப்பந்தத்திலே கச்சத்தீவுப் பகுதியிலே மீன் பிடிக்கக்கூடாது என்று எங்கும் சொல்லப்படவில்லை. அதற்குப் பிறகு இந்திய, இலங்கை அதிகாரிகளுக்கு இடையே பரிமாறிக்கொள்ளப்பட்ட கடிதங்களில் மட்டும்தான், அங்கே வலைகளை உலர்த்தலாம், அந்தக் கோயில் திருவிழாவிற்குச் செல்லலாம் போன்ற உரிமைகள் வரையறுக்கப்பட்டன. இன்றைக்கு அந்த உரிமைகளும்கூட பறிக்கப்பட்டிருக்கின்றன. இப்படி இரண்டு நாடுகளுக்கிடையே போடப்பட்ட அந்த ஒப்பந்தம் இன்றைக்குத் தன்னிச்சையாக இலங்கை அரசால் மீறப்பட்டிருக்கின்றது. இந்த நிலையிலே சர்வதேச நியதிகளின்படி அந்த ஒப்பந்தத்தை இலங்கை அரசு மீறிவிட்டது என்ற அடிப்படையிலே அந்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்யச் சொல்லி இந்திய அரசு நடவடிக்கை எடுப்பதுதான் முறையான ஒரு காரியமாக இருக்கும்.

முற்பகல் 11-10

இங்கே அவையிலே இருக்கின்ற அனைத்து அரசியல் கட்சி உறுப்பினர்களும் ஒருமனதாக, கச்சத்தீவு ஒப்பந்தத்தை இரத்துச் செய்து கச்சத்தீவை மீண்டும் இந்தியாவே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கோருகிற அந்தக் கருத்தைக் கவனத்தில் கொண்டு இந்தப் பேரவையிலே தமிழக முதல்வர் அவர்களே ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து கச்சத்தீவை மீட்டெடுக்க இந்திய அரசை வலியுறுத்த

வேண்டுமென்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பிலே நான் கூறுகின்றேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு சேது சமுத்திரத் திட்டம் நிறைவேறினால், அந்த மீனவர்களுடைய பிரச்சினை பெருமளவு தடுக்கப்படும். அவர்களுடைய அந்தத் துயரங்கள் தீருவதற்கு ஒரு வழி பிறக்கும். ஏனென்று சொன்னால், இப்பொழுது அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலே அது bilateral water ஆக, இரு நாடுகளுக்கும் உரிமையான ஒரு கடற்பிராந்தியமாக அது இருக்கிறது. சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் அது ஒரு international water ஆக, சர்வதேசக் கடற்பிராந்தியமாக மாறும். அப்போது இலங்கை அரசு இந்த அளவுக்கு அங்கே அத்துமீறல்களைச் செய்ய முடியாத ஒரு நிலை ஏற்படும். அந்த சேது சமுத்திரத் திட்டம் வந்தால், அது இலங்கைக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் என்பதனால்தான் அன்றைக்கு சேது சமுத்திரத் திட்டத்தை எதிர்த்தார்கள், இன்றைக்கும் பலர் அதை எதிர்த்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, கச்சத்தீவுப் பிரச்சினையைத் தீர்ப்பதோடு சேர்த்து, சேது சமுத்திரத் திட்டத்தையும் நிறைவேற்றுவதற்குத் தமிழக அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு முன்னூறுக்கும் மேற்பட்ட நம்முடைய மீனவர்கள் கொல்லப்பட்ட அந்தச் சம்பவம், ஒரு சர்வதேச நீதிமன்றத்திற்கு இலங்கை அரசை அழைத்து விசாரிக்கத் தகுதியான ஒரு வழக்காக இருக்கிறது. எனவே, நம்முடைய குடிமக்கள் முன்னூறுக்கும் அதிகமான பேர்களைக் கொன்றிருக்கிற அந்த இலங்கை அரசின் அத்துமீறலை சர்வதேச நீதிமன்றத்திலே புகார் செய்து, இலங்கை அரசை விசாரிப்பதற்கு மத்திய அரசை நாம் வலியுறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். இந்தப் பிரச்சினை தொடர்பாக நாம் தீர்மானம் நிறைவேற்றுவதும், அறிக்கை வெளியிடுவதுமாக மட்டுமே இருந்துவிடாமல் இதற்கு இன்றைக்கு ஒரு முழுமையாக முற்றுப்புள்ளியை வைக்கின்ற அளவிலே, நம்முடைய முதல்வர் அவர்கள் ஏற்கெனவே இதே மாமன்றத்திலே சொல்லியிருக்கின்றார்கள். இந்த நிலை தொடர்ந்தால், நம்முடைய மீனவர்களின் கை மீன்களை மட்டும் பிடித்துக்கொண்டிருக்காது என்று எச்சரிக்கையாகவே இங்கே நம்முடைய முதல்வர் அவர்களே அறிவித்திருக்கின்றார்கள். அவர்கள் மீன் பிடிக்கின்ற அந்தக் கையிலே வேறு உபகரணங்களைப் பிடிக்கக்கூடிய நிலைக்கு நம்மை ஆளாக்கிவிடக் கூடாது, அந்த நிலைக்கு மத்திய அரசு அந்த

2009 ஜூன் 18] [திரு. து. ரவிக்குமார்]

மீனவர்களைத் தள்ளக் கூடாது என்று கேட்டு, இந்தப் பிரச்சினைக்கு முழுமையாக ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்றால், அந்தக் கச்சத்தீவு ஒப்பந்தத்தை இரத்துச் செய்து, மீண்டும் கச்சத்தீவை இந்தியாவே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தித் தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு) நீங்கள் வேண்டுகோள் ஒன்றுமே கொடுக்கவில்லை, கவன ஈர்ப்பு அறிவிப்பு எதுவுமே கொடுக்கவில்லை நீங்கள். (குறுக்கீடுகள்) அறிவிப்புக் கொடுக்காமல் எப்படி நீங்கள் பேசுகிறீர்கள்? உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சின்னசாமி, நீங்கள் கொஞ்சம் அமைதியாக இருங்கள். டெஸ்க்குக்குள் படுத்துக்கொண்டு சத்தம் போடுவதெல்லாம் வேண்டாம்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** Speaker Sir...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு உறுப்பினர் கொடுக்கவில்லை. அவருக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுப்பதா, கொடுக்கக் கூடாதா என்பது உங்களுடைய உரிமை. ஆனால் ஒரு பெரிய கோஷம், கோரஸ் எழுப்பிக்கொண்டு, கொடு, கொடு என்றால், எப்படிக் கொடுக்க முடியும்? (குறுக்கீடு) அதை எப்படி நீங்கள் கேட்க முடியும்? நீங்கள் பின்னாலே உட்கார்ந்துகொண்டு, ஒரு பெஞ்சில் உட்கார்ந்துகொண்டு, கொடு, கொடு என்று கேட்டால், கொடுத்துவிட வேண்டுமா? (குறுக்கீடு) அது ஏன் கொடுத்துவிட வேண்டுமா என்று கேட்கிறேன். அதெல்லாம் முடியாது. கொடுப்பதைக் கொடுங்கள், கோஷம் போட்டு வாங்கிவிடலாம் என்றால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரை. (குறுக்கீடு) திரு. டி. ஜெயக்குமார், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சின்னசாமி, எச்சரிக்கிறேன், உங்களை. அப்போதிலிருந்து நிரம்ப சத்தம் போட்டுக்கொண்டிருக்கிறீர்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் இரண்டு பேரும் உட்காருகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) திரு. சதன் திருமலைக்குமார், உட்காருகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடு) நான்

மாண்புமிகு முதலமைச்சரைப் பேசச் சொல்லியாகிவிட்டது. அதற்குப் பிறகும் நின்றுகொண்டிருப்பது முறையல்ல. மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

*(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)*

*முற்பகல் 11-15*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கச்சத்தீவுப் பிரச்சினை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. டி. ஜெயக்குமார் அவர்களும், திரு. சி. ஞானசேகரன் அவர்களும், திரு. கோ.க. மணி அவர்களும், திரு. கே. மகேந்திரன் அவர்களும், திரு. வை. சிவபுண்ணியம் அவர்களும், திரு. து. ரவிக்குமார் அவர்களும் பல்வேறு கருத்துகளை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள்.

அத்தகைய கருத்துகளின் மொத்தத் தொகுப்பு என்னவென்றால், 'கச்சத்தீவு மீண்டும் இந்தியாவிற்குத் தரப்பட வேண்டும்' என்பதாகும். 'தரப்பட வேண்டும்' என்று கூறுவதிலிருந்தே, அது ஏற்கெனவே நம்முடைய இந்திய அரசால், இந்திய அரசுக்கும், இலங்கை அரசுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், இலங்கை அரசுக்குத் தரப்பட்ட ஒரு பகுதி என்பது தெளிவாகத் தெரிகின்றது.

"கச்சத்தீவை மீட்டே தீருவேன்" என்று நம்முடைய இன்றைய எதிர்க்கட்சி--அன்றைய ஆளுங்கட்சி அ.தி.மு.க. சார்பில் முதலமைச்சராக வீற்றிருந்த அம்மையார் ஜெயலலிதா அவர்கள், இந்தக் கோட்டைக் கொத்தளத்திலே *1991* ஆம் ஆண்டு சூளுரைத்திருக்கின்றார்கள். அப்படிச் சூளுரைத்ததையொட்டி, *3-10-1991* அன்று--சூளுரைத்த முதலமைச்சரே--சூளுரைத்ததற்கு இரண்டு மாதங்கள் கழித்து--இதே அவையில் அதற்காகத் தீர்மானத்தையும் முன்மொழிந்து, ஒருமனதாக நிறைவேற்றினார்கள். அதற்கு *20-4-1992* அன்று இதே அவையில் அம்மையார் ஜெயலலிதா பேசும்பொழுது, 'கச்சத்தீவை மீட்க வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை இங்கே நிறைவேற்றி, மத்திய அரசுக்கு அனுப்பினோம். ஆனால், கச்சத்தீவை மீட்பது என்பது விரைவில் நடக்கக்கூடிய, நடைபெறக்கூடிய ஒன்றாகத் தெரியவில்லை' என்று கூறியிருக்கிறார்.

அவர் மேலும் பேசும்போது, கடலிலே இந்திய மீனவர்கள் தாக்கப்படுவது குறித்தும் சிலவற்றைச் சொல்லியிருக்கிறார். அதாவது,

2009 ஜூன் 18] [கலைஞர் மு. கருணாநிதி]

"மீனவர்கள் International Boundary Line-ஐக் கடந்து சென்று, கச்சத்தீவு அருகில் உள்ள கடல் பகுதியில் மீன் பிடித்தால்தான், அவர்களுக்குப் போதிய அளவு நல்ல வகை மீன்கள் கிடைக்கின்றன." —திரு. டி. ஜெயக்குமார் அவர்களுக்கு அது நன்றாகத் தெரியும். நல்ல மீன்கள் கிடைக்க வேண்டுமேயானால், இப்பொழுது கடலில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற எல்லையைக் கடந்து, குறிப்பிட்ட பகுதிக்குச் சென்றால்தான், நல்ல வகை மீன்கள் கிடைக்கும்.—நம்முடைய இந்திய கடல் எல்லைக்குள் மீன் பிடிக்கச் சென்றால், அவர்களுக்குத் தேவையான அளவு நல்ல ரக மீன்கள் கிடைப்பதில்லை. அதனால், அவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ பல முறை International Boundary Line-ஐக் கடந்து செல்லும்போது, இலங்கை கடற்படையினர் அவர்களுடைய படகுகள்மீது துப்பாக்கிச் சூடு நடத்தி, அவர்கள் பிடித்து வைத்திருக்கின்ற மீன்களையெல்லாம் கைப்பற்றிக் கொண்டு, அவர்களுடைய படகுகளை எரித்து, இப்படிப்பட்ட சம்பவங்கள் எத்தனையோ நடந்திருக்கின்றன" என்று அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா இதே அவையிலே குறிப்பிட்டிருக்கிறார்.

முற்பகல் 11-20

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் மீனவர்கள் காணாமல் போகும் நிலைமை ஏற்பட்டது என்று எதிர்க்கட்சியிலே சிலர் இங்கே குறிப்பிட்டார்கள். ஒரு கணக்கு எடுத்துப் பார்த்தால், 1986-இல் மீனவர்கள் 4 பேர் மீன் பிடிக்கச் சென்றவர்கள் காணாமல் போனார்கள். 1987-இல் 4 பேர் காணாமல் போனார்கள். 1988-இல் 8 பேர் காணாமல் போயிருக்கிறார்கள். 1993-இல் 5 பேர் காணாமல் போயிருக்கிறார்கள். 1995-இல் 2 பேர் காணாமல் போயிருக்கிறார்கள். 2002-இல் 22 பேர் காணாமல் போயிருக்கிறார்கள். 2003-இல் 6 பேர் காணாமல் போயிருக்கிறார்கள். 2004-இல் 4 பேர் காணாமல் போயிருக்கிறார்கள். 2007-இல் 12 பேர் காணாமல் போயிருக்கிறார்கள். இந்தக் கணக்கு விவரம், ஒப்பீடு—இது எப்போதும் நடைபெறுகின்ற ஒன்றுதான்--குறிப்பிட்ட அந்த ஆட்சியிலேதான் நடைபெற்றது, இந்த ஆட்சியிலே நடைபெறவில்லை என்பதற்காகச் சொல்லவில்லை, பொதுவாக கடந்த காலத்திலே அன்றைய முதலமைச்சர், அம்மையார் குறிப்பிட்டதைப்போல—அந்த boundary line-ஐத் தாண்டிச் சென்றால், நல்ல வகை மீன் கிடைக்கும் என்று எண்ணுகின்ற சில பேராசை கொண்ட மீனவ மக்களால் அவர்கள் தங்களுடைய உயிரை இழக்க நேரிடுகிறது என்ற உண்மை வெளிப்படுவதை நாம் மறந்துவிடக் கூடாது.

[கலைஞர் மு. கருணாநிதி] [2009 ஜூன் 18

இங்கே பேசிய அ.தி.மு.க. உறுப்பினர் ஒன்றைச் சொன்னார்கள். 'கச்சத்தீவை தி.மு.க. ஆட்சி தாரை, வார்த்துவிட்டது' என்று சொன்னார்கள். இந்த "தாரை வார்ப்பது" என்பது தி.மு.க. கடைப்பிடிக்கக்கூடிய ஒன்றல்ல. 'தாரை வார்ப்பது' என்பது கடந்த காலத்தில் கல்யாணங்களில் மாப்பிள்ளைகள் கையில் பெண்களை ஒப்படைத்து தாரை வார்த்துக் கொடுப்பார்கள். 'தாரை வார்ப்பது' என்பது தமிழ்ச் சொல் அல்ல. அது வட மொழிச் சொல். அப்படி தாரை வார்த்த எந்தச் சம்பவமும் *1974* ஆம் ஆண்டில் நடைபெறவில்லை. அந்த ஆண்டில் கச்சத்தீவை இலங்கைக்குத் தருவது என்ற முடிவை மத்திய அரசு எடுத்தபோது, அன்றைய தமிழகத்திலே இருந்த அரசான திராவிட முன்னேற்றக் கழக அரசு அதற்குப் பெரும் எதிர்ப்பைத் தெரிவித்தது. இருந்தபோதிலும், சில காரணங்களைச் சொல்லி கச்சத்தீவு இலங்கைக்கு வழங்கப்பட்டுவிட்டது. அப்படி வழங்கப்பட்ட நேரத்திலேகூட கச்சத்தீவிலே மீன் பிடிக்கும் உரிமை, யாத்திரை செல்கின்ற உரிமை, மீன் வலைகளைக் காய வைப்பதற்கான உரிமை, இவைகளெல்லாம் மீனவ மக்களுக்கு உண்டு என்கின்ற ஷரத்து அதிலே சேர்க்கப்பட வேண்டுமென்று அன்றைய தமிழக தி.மு.க. அரசு வலியுறுத்தியதன்பேரில், அந்த ஷரத்து அதிலே சேர்க்கப்பட்டது. ஆனால், அதற்குப் பிறகு வந்த நெருக்கடி நிலை காலத்தில், இங்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி இல்லாத சூழ்நிலை தமிழகத்திலே கவர்னர் ஆட்சி நடைபெற்ற நேரத்தில், அந்த ஷரத்துகள் எப்படி ஒப்பந்தத்திலிருந்து விலக்கப்பட்டன என்றே தெரியாத அளவிற்கு அந்த ஷரத்துகள் பறிபோய்விட்டன. அதற்குப் பிறகு அந்த ஷரத்துகளைச் சேர்க்க வேண்டுமென்று நாம் மத்திய அரசோடு வாதிட்டுக் கொண்டிருக்கிறோம்.

முற்பகல் *11-25*

இந்தச் சூழ்நிலையிலேதான் இன்றைக்குப் பத்திரிகைகளில் வந்துள்ள சில சம்பவங்கள்— கம்பங்களிலே விளக்குகளை வைத்து— அந்த விளக்குகளிலிருந்து வரும் ஒளியின்மூலமாக அரங்குகள் அமைத்து, வருகின்ற படைகளைக் கண்காணிக்கவும் அல்லது அங்கிருந்து படைகளைச் செலுத்துவதற்கான ஏற்பாடுகள் கச்சத்தீவில் நடைபெறுவதாக வந்துள்ள செய்திகளை வைத்து, உறுப்பினர்கள் இங்கே அதனால் ஏற்படக்கூடிய ஆபத்தை விளக்கியிருக்கின்றார்கள். அப்படி ஒரு நிலை ஏற்படுமேயானால், அதை இந்திய அரசு வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முடியாது; வேடிக்கை

பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது என்பதற்காகத்தான் அவர்கள் அதை எச்சரிக்கையாக இன்றைக்கு இங்கே பேசியிருக்கிறார்கள். கடிதம் எழுதினால் மாத்திரம் போதாது என்று கோ.க. மணி சொன்னார். ஒவ்வொரு முறையும் கடிதம் எழுதாமல் நாம் மத்திய சர்க்காரை நோக்கி இராணுவத்தை அனுப்ப முடியாது. கடிதம் எழுதுவதன்மூலம் நாம் நம்முடைய உணர்வுகளைக் காட்டிக்கொண்டிருக்கின்றோம். ஆனால் கடிதம் எழுதினால் அதற்குப் பதில் வருகிறதல்லவா? அந்தக் கடிதத்தை அங்கே இருக்கின்ற முக்கியமான பிரதமரோ அல்லது தொடர்புடைய அமைச்சர்களோ பார்த்து நடவடிக்கை எடுக்கிறார்கள் அல்லவா? அந்த நடவடிக்கைகளை எடுப்பதற்காகத்தான் கடிதம் எழுதுகிறோம். அதற்குப் பிறகு அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, இதற்கெல்லாம் முடிவு காண வேண்டுமென்று நம்முடைய நண்பர் சிவபுண்ணியம் அவர்கள் இங்கே சொன்னார். அனைத்துக் கட்சிக் கூட்டங்களைக் கூட்டுவதற்கு ஓர் அறிக்கை விட்டால் போதும் என்ற அளவிற்கு நிலைமை இப்போது இல்லை. அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டினால், அந்தக் கூட்டத்திற்கு வர முடியாது என்று சொல்கின்ற அளவிற்கு நம்முடைய அனைத்துக் கட்சிகளிடையே இருக்கின்ற ஒற்றுமையை அவர் அறியாதவர் அல்ல. அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டும்போதே, அது இலங்கையிலே உள்ளவர்களுக்கு இடம் கொடுத்துவிடுகின்ற கூட்டமாக அமைந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட நான் அஞ்சுகிறேனே அல்லாமல், வேறல்ல.

கச்சத்தீவை தாரை வார்க்க தி.மு.க. ஒப்புக்கொள்ளவும் இல்லை; தாரை வார்க்க உடன்படவும் இல்லை. இங்கே பேசிய நண்பர்கள் குறிப்பிட்டதைப்போல—ரவிக்குமார் குறிப்பிட்டதைப்போல—பாராளுமன்றத்திலேயே இந்தத் தீர்மானம் வந்தபோது வெளிநடப்புச் செய்திருக்கிறது தி.மு.க. என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தி.மு.கழகத்தைப் பொறுத்து மாத்திரமல்ல, தி.மு.கழக ஆட்சியைப் பொறுத்தும் பல நேரங்களில் கச்சத்தீவுப் பிரச்சினையை எழுப்பி, கச்சத்தீவை மீட்டுக் கொடுங்கள் என்று கேட்கத் தவறியதும் இல்லை. கச்சத்தீவிலே மீனவர்களுக்குள்ள உரிமை பாதிக்கப்படுவதை எடுத்துக்காட்டி, அந்த பாதிப்பை நிவர்த்திக்க வேண்டும் என்று கேட்கவும் கழக அரசு தவறியது இல்லை.

ஒன்றைச் சொல்ல வேண்டுமேயானால், 30-9-1994-ல் தமிழக முதலமைச்சராக இருந்த அம்மையார் ஜெயலலிதா, அப்போது

பிரதமராக இருந்த திரு. நரசிம்ம ராவ் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். அதில் "The ceding of this tiny island to the Island Nation had been done by the Government of India in the interest of better bilateral relations"—அதாவது, 'தீவு நாடான இலங்கைக்கு, இந்தச் சின்னஞ்சிறிய தீவினை (கச்சத்தீவை) இந்திய அரசு பிரித்துக் கொடுத்தது, இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையிலே நல்லுறவு நிலவிட வேண்டும் என்பதற்காகத்தான்' என்று அன்றைய முதலமைச்சர், அம்மையார் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். அதே பாடத்தைத்தான் இன்னமும் மத்தியிலே உள்ள அமைச்சர்கள் கூறி வருகிறார்கள். இலங்கைக்கும், இந்தியாவிற்கும் பல பிரச்சினைகள் இருந்தாலும், இரு நாடுகளுக்கிடையே நல்லுறவு வேண்டும் என்பதற்காகத்தான் கச்சத்தீவு அளிக்கப்பட்டது என்று நரசிம்ம ராவ் அவர்களுக்கு எழுதிய கடிதத்திலே அன்றைய முதலமைச்சரே குறிப்பிட்டிருக்கிறார்.

நான் அதிலே வாதம் புரிய விரும்பவில்லை; எதிர்வாதம் செய்ய விரும்பவில்லை. சூழ்நிலைக்கேற்ப அன்றைக்கு எழுதப்பட்ட கடிதம். மத்திய அரசு சொன்ன சமாதானத்திற்கேற்ப எழுதப்பட்ட கடிதம். இருந்தாலுங்கூட அவைகளையெல்லாம் சொல்வதால் இன்றைக்கு அங்கே அடிபடுகின்ற, உதைபடுகின்ற, தாக்கப்படுகின்ற மீனவர்களுக்கு எதிராக என்னுடைய எந்தவொரு வார்த்தையும் அமையாது என்ற உறுதியோடு சொல்கின்றேன்.

நாம் நம்முடைய ஒற்றுமையை மேலும் மேலும் வலியுறுத்தி, சட்டசபையிலே நிறைவேற்றுகின்ற தீர்மானம் மேலும் மேலும் செயல்படுத்துகின்ற அளவிற்கு வலுப்பெற்றதாக அமைய வேண்டும். இதே மாதிரியான தீர்மானங்கள் இந்த அவையிலே பல முறை நிறைவேற்றப்பட்டிருக்கின்றன; திரு. மணி அவர்கள்கூட சொன்னார்கள்; தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று பா.ம.க. சார்பிலே சொன்னார்கள்.

*முற்பகல் 11-30*

அவர்களுடைய தலைவர் டாக்டர் அவர்கள்கூட அறிக்கை வெளியிட்டிருக்கிறார். சட்டப் பேரவையிலே இதற்காக கச்சத்தீவு குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. தீர்மானம் நிறைவேற்றுவதற்கு நாம் ஒன்றும் அஞ்சுகின்றவர்கள் அல்ல. ஆனால், அந்தத் தீர்மானத்தின் வாசகத்தின் அடிப்படையில், நாம்

ஒற்றுமையாகச் செயல்படக்கூடியவர்கள் என்ற நம்பிக்கை அங்கேயிருப்பவர்களுக்கு வருமேயானல், 'ஏ அப்பா, தீர்மானம் நிறைவேற்றிவிட்டார்களே', என்று அவர்கள் பயப்படுகின்ற அளவிற்கு நிலைமை இங்கே இருக்கிறதா என்று நம்மை நாமே ஒரு முறை திரும்பிப் பார்த்துக்கொண்டால், அது புரியும். ஆகவே, தீர்மானம் நிறைவேற்றுவது முக்கியமல்ல. ஏற்கெனவே தீர்மானம் நிறைவேற்றியபோது, அ.தி.மு.க. ஆட்சியிலே, கச்சத்தீவை திரும்பப் பெற வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றியபோது, நாங்கள் அதை எதிர்த்து வெளிநடப்புச் செய்யவில்லை. ஆளுங்கட்சி கொண்டு வந்த தீர்மானமாயிற்றே என்று எதிர்க்காமல், அனைவரும் ஆதரித்து ஒருமனதாக அந்தத் தீர்மானம் நிறைவேறியது. எனவே, இப்போது அப்படியொரு தீர்மானம் கொண்டு வந்தால், எதிர்க்கட்சிகள் உட்பட எல்லாக் கட்சிகளும் அன்றைக்கு ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி வெளிநடப்புச் செய்யாமல், ஆதரிக்கத் தயாராக இருக்கிறோம் என்ற உறுதிமொழி அனைவர் சார்பிலும் எனக்குக் கிடைக்குமேயானால், அப்படியொரு தீர்மானத்தைக் கொண்டு வர நான் தயாராக இருக்கிறேன் என்பதை மாத்திரம் இந்த நேரத்திலே எடுத்துக் காட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உத்தரவாதத்தை நண்பர் மணி எனக்கு அளிப்பாரா என்று கேட்டுக்கொண்டு, இந்த விளக்கம் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குப் போதுமானது என்று கூறி அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கச்சத்தீவு பற்றி இங்கேயிருக்கின்ற அனைத்துக் கட்சி உறுப்பினர்களின் கருத்துகளுக்குப் பதிலளிக்கின்ற வகையில் தங்களுடைய உரையில், மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்து, மத்தியில் திரு. நரசிம்ம ராவ் அவர்கள் பிரதமராக இருந்த நேரத்தில் எழுதப்பட்ட கடிதத்தின் தேதி பற்றி இங்கே குறிப்பிட்டார்கள், *30-9-1996* என்று. ஆனால் *30-9-1996* அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இங்கே பொறுப்பிலே இல்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** *1994* என்று சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *30-9-1994.*